அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண் : 08 /2017
தேதி : 19.1.2017

**தமிழகத்தின் கோரிக்கை நிராகரிக்கபட்டது என்ற செய்தி வெந்தபுண்ணில் வேல் பாய்ச்சுவது போல, ஒட்டு மொத்ததமிழர்களையும் அதிர்ச்சிக்குள்ளாக்கி இருக்கிறது.**

**அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் அறிக்கை.**

2014 ஆம் ஆண்டு முதல் இன்று வரை ஜல்லிக்கட்டு நடத்துவதற்கு போராடியிருக்கும் பல்வேறு தரப்பினருக்கும் மேலும் உற்சாகம் ஊட்டும் வகையில் இளைஞர்களும், மாணவர்களும் கடும் குளிர், வெயிலையும் பொருட்படுத்தாமல் பாரம்பரியத்தை மீட்பதற்காக போராடிக்கொண்டிருக்கின்றனர்.

அதுமட்டுமல்லாது ஒட்டுமொத்த தமிழக மக்களும், பல்வேறு நாடுகளில் உள்ள தமிழர்களும் தமிழ் உணர்வுக ளுக்காகபோராடிக்கொண்டிருக்கின்றனர், இவர்கள் அனைவரின் ஒருமித்த கோரிக்கைக்கு பிரதமர் அவர்கள் செவிசாய்க்கவில்லை என்பது மிகுந்த வேதனையளிக்கிறது..

இந்த உணர்வுமிக்க போராட்டங்கள் தொடர்கின்ற நிலையில் தீர்வு காண இயலாதபோது பேச்சுவார்த்தை மூலமாக சட்ட ரீதியாக அணுக வேண்டும் என்ற கருத்து மேலும் வேதனையளிக்கிறது. தமிழகத்தில் இதுபோன்ற போராட்டங்கள் என்றுமே காணாதவாறு ஒரு எழுச்சி கையாளப்பட வேண்டும்.

எதற்கும் இடம் கொடுக்காமல் இந்த பாரம்பரிய விளையாட்டு உடனே நடைபெற அவசர சட்டங்கள் பிறப்பிக்க வேண்டும்.

மேலும் தமிழக முதலமைச்சருக்கு ஒரு வேண்டுகோள் :-

உச்சநீதிமன்ற தீர்ப்பை காவிரி நதிநீர் பங்கீட்டில் கர்நாடக அரசு மதிப்பளிக்கவில்லை தீர்ப்பை மதிக்காமல், தமிழகத்துக்கு தண்ணீர் தர மறுத்ததை நினைவூட்ட விரும்புகிறேன். அப்படி இருக்கும் பட்சத்தில் நமது தமிழ்நாட்டில் நமது உணர்வுக்கு மதிப்பளித்து ஜல்லிக்கட்டு நடத்த மாநில அரசு அதிரடி அனுமதி அளிக்கவேண்டும் என்றும், அதன் விளைவுகள் எதுவாக இருந்தாலும் அனைத்து தமிழ்நெஞ்சங்களும் உங்கள் பின்னால் போராட தயாராக இருக்கிறோம்.

எனவே உடனடியாக ஜல்லிக்கட்டு நடத்த அனுமதிக்கவேண்டும் என்று தங்களை வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்,
என்றும்அன்புடன்,

**ஆர்.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்